[1987 ஏப்ரல் 9

சென்னையில் உச்ச நீதிமன்றப் பிரிவு ஒன்றினை அமைத்தல்.

355—(* வினா எண் 10034) திரு. மு. மாரிமுத்து மற்றும் மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உச்ச நீதிமன்றத்தின் ஒரு பிரிவு சென்னையில் அமைத்திட மத்திய அரசை வலியுறுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இந்திய உச்ச நீதிமன்றத்தின் பிரிவு ஒன்றைத் தமிழ் நாட்டில் அமைக்க வேண்டும் என்ற வேண்டுகோள் அடங்கிய செயற்குறிப்பினை மைய அரசிற்கு 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அனுப்பியது. இவ்வரசின் செயற்குறிப்பினை உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களுக்கு மைய அரசு அனுப்பியுள்ளதாகவும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் 130-வது பிரிவின்கீழ் இப்பொருள் குறித்த செயற்குறிப்பு எதும் தலைமை நீதிபதியிடமிருந்து பெறப்படவில்லை என்றும் மைய அரசின் சட்டம் மற்றும் நீதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது குறித்து மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு குடிமகனும் குறைந்த செலவில் குறைந்த தொலைவில் நீதியை பெறுவதற்குண்டான வாய்ப்பை உருவாக்கி தரவேண்டியது ஒரு அரசினுடைய கடமை என்ற அடிப்படையில் மதுரையில் சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவை அமைப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டதே அது எந்த நிலையில் உள்ளது? அதற்காக போடப்பட்ட ஜஸ்வந்த் சிங் கமிஷனும் இசைவு தெரிவித்திருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறதே அது பற்றிய விவரங்களை அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றம் அதற்கு ஏற்பு தரவில்லை. இருந்தபோதிலும் மதுரையில் ஒரு கிளையை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மைய அரசுக்கு எழுதினார்கள். ஜஸ்வந்த் சிங் கமிஷனிலும், மாநில அரசினுடைய கோரிக்கை நியாயமானது என்று அவர்கள் மைய அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறார்கள். மைய அரசு அதை ஆய்ந்து வருகிறது. விரைவில் அதற்கான ஆணை பிறப்பிக்கலாம் என்று நம்பப்படுகிறது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவை சென்னையிலே அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு அளித்து 5, 6 ஆண்டுகள் ஆகியும் கூட உச்ச நீதிமன்றம் இன்னும் அபிப்பிராயம் சொல்லவில்லையே, ஏதாவது வழக்குகள் தேக்கம் என்றால் அரசாங்கத்தின் மீது குறை சொல்லுகிற நீதிபதிகள் 6 ஆண்டுகள் மாநில அரசினுடைய கோரிக்கையைப் பற்றி கருத்து சொல்ல மறுக்கிறார்களே, ஆகவே தனியாக விசேஷ அதிகாரிகளை அனுப்பியாவது மைய அரசோடு தொடர்பு கொண்டு அந்த உச்ச நீதிமன்றத்தினுடைய கருத்தை. . .

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அளவுக்கு மாநில அரசு அது குறித்து கவலை உறுகிறதோ அந்த அளவுக்கு மைய அரசும் கவலை உறுகிறது. காரணம் பல பகுதிகளில் சர்க்கியூட் பெஞ்ச் ஆப் தி சுப்ரீம் கோர்ட் கொண்டு வரவேண்டும் என்று கொள்கை ரீதியாக மைய அரசு விரும்புகிறது. எப்படி மதுரையிலே ஒரு கிளையை அமைக்க சென்னை உயர்நீதிமன்றம் விருப்பம் தரவில்லையோ அதுபோல சிலபல காரணங்களினால் உச்ச நீதிமன்றமும் விருப்பம் தெரிவிக்கவில்லை. அதையேதான் மைய அரசு. சுட்டிக் காட்டியிருக்கிறது. மைய அரசு அது குறித்து பிரத்தியேகமாக முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தினுடைய ஒரு பகுதி தென் மாநிலங்களிலேயே குறிப்பாக சென்னையிலே வைப்பதற்கு வாய்ப்பும் வசதியும் அவசியமும் தற்போது அதிகமாக இருக்கிறது. இடையிலே கூட சென்னை சட்டக் கல்லூரியிலே

அந்த உச்ச நீதிமன்றத்தினுடைய கிளையை வைப்பதற்கு வாய்ப்பு இருப்பதாக தகவல் வந்தது. அது எந்த நிலைமையில் இருக்கிறது? அப்படிப்பட்ட நிலை வந்தால் இப்போது இருக்கக் கூடிய சட்டக் கல்லூரியின் வளாகத்திற்குள்ளேயே செயல்படுமோ? அது பற்றி என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் மைய அரசுக்கு எழுதிய பிறகு, மைய அரசு உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி திரு. சந்திரசூட் அவர்களை சென்னைக்கு அனுப்ப, அவர் வந்து சென்னை சட்டக் கல்லூரி இடத்தை எல்லாம் பார்த்து, அது தகுந்த இடம் என்று முடிவு செய்து அதைகூட நாங்கள் மைய அரசுக்கு எழுதியிருந்தோம். ஆனால் இடையில் ஏனோ உச்ச நீதிமன்றம் முடிவெடுத்து பதில் அனுப்பாமல் இருக்கிறார்கள். இல்லையென்று அவர்கள் மறுக்கவில்லை. மத்திய அரசினுடைய சட்டத் துறை இது குறித்து ரிமெய்ண்டர் கூட உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளதாக மாநில அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது.

கொன்றை வேந்தன்.

356—(வினா எண் 11247) திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறநூலாகிய கொன்றை வேந்தனின் இரண்டாம் வகுப்பு பாடநூலில் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற வாசகம் விடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1981 ஆம் ஆண்டில் முதல் பதிப்பாக வெளியிட்ட 2 ஆம் வகுப்பு தமிழ் பாடநூலில் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற வாசகம் இடம் பெறவில்லை.

(ஆ) 1981 ஆம் ஆண்டில் முதல் பதிப்பாக வெளியிடப்பட்ட நூல் நடப்பு கல்வி ஆண்டு 1986-87 வரை மறு பதிப்பாக வந்த காரணத்தால் இன்னும் அந்த வாசகம் இடம் பெறாமல் உள்ளது.